1993 மார்ச் 23]

யைவிட மலிவான விலையிலே மணிச்சத்தும், சாம்பல் சத்தும் வெளிநாடுகளிலே கிடைப்பதால், அதனை இறக்குமதி செய்து விவசாயிகளுக்கு விநியோகிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணிச்சத்து, சாம்பல் சத்து ஆகிய உரங்களை வெளி நாடுகளிலிருந்து மத்திய அரசின் அனுமதியோடு இறக்குமதி செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த இரண்டு உரங்களுக்கும் மத்திய அரசு வழங்கி வந்த மானியத்தைத் திரும்பப் பெற்ற வுடன் நம்முடைய விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தாராள மாகக் குறைந்த விலையிலே கிடைக்க வேண்டும் என்பதற் காக இந்தியத் துணைக் கண்டத்திலே முதன் முதலாக, தேவை ஏற்படின் தமிழக அரசே இறக்குமதி செய்யும் என்ற அறிவிப்பை நம்முடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்தான் வெளியிட்டார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 157, திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

157—

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டம்

*15761—திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :—

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவி பெறும் திட்டத்தின் கீழ், திருமணம் செய்யும் பெண்களின் திரு மண வயதை 18 வயதாகக் குறைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அப்படிப்பட்ட செயற் குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டத்தில் தற்போது வயது உயர்த்தப்பட்டு இருக்கிறது அதை 18 வயதாகக் குறைக்க வேண்டுமென்று நான் கேட்டு இருக்கிறேன். **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற் றப் பெற்றது.

[1993 மார்ச் 23

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிங்காரம், கேள்வி நேரத்தில் வேண்டாம், கேள்வி நேரத்தில் இது விவாதத்திற் குரிய பொருளாக ஆகிவிடும். நீங்கள் சொல்கிறபடி திருமணம் நடந்தால் சட்டப்படி குற்றம்; நடக்கிற குற்றத்தை நீங்கள் ஊர்ஜிதப்படுத்துவது சரியல்ல. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு யதார்த்தவாதி எதையும் எப்போதும் யதார்த்தமாக பேசுகின்றவனே தவிர, வேறு சட்டத்திலே இது இருக்குமா, இல்லையா என்பதைப்பற்றி நான் பேசவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திரு. ஆர். சிங்காரம்: சரி. 18 வயதுக்குக் குறைப்பது தான் மிகமிக நியாயமானது. கிராமப்புறத்திலே 21 வயது வரை யாரும் பொறுத்து இருப்பது இல்லை. சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக வறுமையின் காரணமாக 18 வயதில் திருமணம் செய்ய வேண்டிய ஒரு இக்கட்டான சூழ்நிலை ஏற்படுகின்ற காரணத்தினால், இந்தத் திட்டத்தில் 18 வயதுக்குக் குறைப்பதற்கு மீண்டும் அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பெண்ணின் உடல் ஆரோக்கியத்திற்கும், மக்கள் தொகையை கட்டுப்படுத்து வதற்கும் மத்திய அரசும் மாநில அரசும் 21 வயதில் தான் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தி வருகின்றது. அதுமட்டுமல்லாமல், உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் மத்தியப் பேரரசின் இந்திய மக்கள் தொகைத் திட்டத்தில் பெண்ணுக்கு ஏற்ற திருமண வயது 21 என்பதை சிறப்பாக விளம்பரப்படுத்தி வரப்படுகிறது. அதுமட்டுமல்லாமல், யூனிசெஃப் நிறுவனம், ஆரோக்கியமான உடல் ஊனம் இல்லாத குழந்தையைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்றால், 21 வயதில்தான் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பதை விளம்பரப்படுத்தி வரு கிறது. இவற்றிற்கெல்லாம் மேலாக நம்முடைய தமிழகத்தின் சுகாதாரத் துறை துண்டு பிரசுரங்கள் மூலமாகவும் பல்வேறு விளம்பரங்களின் மூலமாகவும் 21 வயதில் திருமணம் செய்து கொள்வதுதான் ஒரு பெண்ணினுடைய உடல் ஆரோக்கியத்திற்கும் குடும்பக் கட்டுப்பாட்டிற்கும் வசதியானது

1993 மார்ச் 23]

என்பதை வலியுறுத்தி வருகின்றது. இந்த நேரத்தில் ஒரு துறை 21 வயது திருமண வயதை விளம்பரப்படுத்துகிறபோது, இன்னொரு துறை 18 வயதில் திருமணம் உதவியைக் கொடுத்தால் அது அரசின் நோக்கத்திற்கு எதிரானதாகவும் முரணானதாகவும் அமைந்துவிடும் என்கின்ற காரணத்தினால் இது பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. தொகுதியில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அரசின் சட்ட திட்டங்களுக்கும், விதிமுறைகளுக்கும் மாறாக எங்காவது திருமணம் நடைபெறுவது தெரிந்தால் அதைத் தடுப்பதற்கு புத்தியும், அறிவுரையும் கூற வேண்டியது சட்டமன்ற உறுப்பினர்களின் கடமையாகும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. தம்புசாமி

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூகநலத்துறை அமைச்சர் அவர்கள் 21 வயதில் தான் திருமணம் நடக்க வேண்டுமென்று சட்டமன்ற உறுப்பினர்கள் அறிவுரை வழங்கவேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் கிராமப்புறங்களில் இருக்கிற நடைமுறை அனுபவம் என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதிலிருந்து மாறுபாடாக இருக்கிறது. கிராமப்புறங்களில் 21 வயது வரை ஒரு பெண்ணை வைத்திருப்பது என்பது எந்தச் சூழ்நிலையிலும் இயலாத ஒன்றாக நடைமுறையில் இருக்கிறதால், இந்தச் சூழ்நிலையை கணக்கில் எடுத்துக்கொண்டு அரசு மீண்டும் பரிசீலிக்கவேண்டும். இல்லையென்றால் எந்த நன்மைக்காக இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறதோ அந்த நோக்கம் நிறைவேறாது. இதை அமுல்படுத்துவதில் சங்கடம் இருக்கிறது என்பதை கருத்திற்கொண்டு அமைச்சர் அவர்கள் இதனை மீண்டும் பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே், வெறும் திருமணம் செய்துக் கொள்வதற்கு மட்டும் இந்த உதவியை பெண்களுக்கு சமூக நலத்துறை வழங்குவது இல்லை ஒரு பெண்ணினுடைய ஆரோக்கியம், ஒரு பெண் ஆரோக்கியமான குழந்தையைப் பெற்றுக்கொள்வது, இவை அனைத்தையும் சமூகநலத் துறை கவனிக்கிற காரணத்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Dr. BEATRIX'D SOUZA : Hon. Speaker, Sir, I do not know the reason why the Hon. Member Singaram wants to espouse marriage at a young age. It is because I suppose young married women are more amenable and more obedient to their husbands I request the Govt. to consider giving this particular assistance to only young graduate women who will understand what it is to be a modern woman Thankyou.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டதாரிகளாக இருந்தாலும் ஏழைகளாக இருந்தாலும் 21 வயது என்பது அவர்களுடைய உடல் ஆரோக்கியத்திற்கும், குழந்தைகள் பெற்றுக்கொள்வதற்கும், வசதியான காலம் என்பதால் இது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 158, திரு. கே. கந்தசாமி, மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர்.

158—

ஊனத்தூர் கிராம ஆதிதிராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கல்.

* 10094—திரு. கே. கந்தசாமி :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் தலைவாசல் தொகுதி, ஊனத்தூர் கிராம ஆதிதிராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் ; ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், ஊனத்தூர் கிராம ஆதிதிராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க தேவையான நிலம் தேர்வு செய்யப்பட்டு கையகப்படுத்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.